செய்தி வெளியீடு எண். 34-2018 நாள்: 17.04.2018

# விழுப்புரம் மாவட்டத்தில் ஏப்ரல் 2018 முதல் ஜுன் 2018 வரை தேசிய வேளாண்மை கூட்டுறவு விற்பனை கூட்டமைப்பு மூலம் உளுந்து கொள்முதல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

*****

தமிழகத்தில் விழுப்புரம் மாவட்டம் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட மிகப் பெரிய மாவட்டமாகும். ஒவ்வொரு ஆண்டும் மாநில உணவு தானிய உற்பத்தியில் 10% பங்களிப்பு விழுப்புரம் மாவட்டம் கொடுத்து வருகிறது.

இந்த மாவட்டத்தில் பயறு வகைப் பயிர்கள் சுமார் 100000 எக்டர் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் பெரும்பான்மையாக 90% உளுந்து பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. இதன் மூலம் சுமார் 85000 மெட்ரிக் டன் உளுந்து உற்பத்தி செய்யப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் உற்பத்தி செய்யப்படும் பயறு வகைகளில் சுமார் 40000 மெட்ரிக் டன் வரை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் விவசாயிகளுக்கு விற்பனை செய்து கொடுக்கப்படுகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் 19 வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. விவசாயிகள் நலன் கருதி உற்பத்தி செய்யப்படும் வேளாண் விளை பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கும் வகையில் மாநிலத்திலேயே முதன்முறையாக தேசிய வேளாண்மை கூட்டுறவு விற்பனை கூட்டமைப்பு (NAFED) மூலம் உளுந்து கொள்முதல் செய்ய வழிவகை செய்யப்பட்டு, அரசு ஆதரவு விலையாக ஒரு குவின்டாலுக்கு ரூ.5400/- வீதம் ஏப்ரல் 2018 முதல் ஜுன் 2018 வரை கொள்முதல் செய்யப்படுகிறது.

மேலும் இந்த திட்டம் தற்போது விழுப்புரம், விக்கிரவாண்டி, திருக்கோவிலூர் மற்றும் உளுந்தூர்பேட்டை ஆகிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் மட்டும் முதலாவதாக துவங்கப்பட்டுள்ளது.

இந்த நான்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கும் இம்மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலிருந்தும் உளுந்து கொண்டு வந்து விற்பனை செய்து விவசாயிகள் பயன்பெறலாம். இதற்காக விவசாயிகள் ஆதார் கார்டு நகல், வங்கி கணக்கு புத்தக நகல், கிராம நிர்வாக அலுவலர்களிடம் பெறப்பட்ட அடங்கல் மற்றும் சிட்டா, வட்டார உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் வேளாண்மை அலுவலர்களால் வழங்கப்படும் பயிர் உற்பத்தி சான்றிதழ் ஆகிய ஆவணங்களுடன் ஒழுங்குமுறை விற்பனைக் கூட கண்காணிப்பாளர் அல்லது மேற்பார்வையாளர்களை அணுகி பதிவு செய்து கொள்ள வேண்டும்.

பதிவு மேற்கொண்ட விவசாயிகளுக்கு குறுஞ்செய்தி மூலமாக உளுந்து கொள்முதலுக்கான தேதி தெரிவிக்கப்படும். விவசாயிகள் கொண்டு வரும் உளுந்து சுத்தமாக தூசு, கல் போன்றவை இல்லாமலும் பிற பயிர் கலப்பு இல்லாமலும், உடைந்த

பருப்பு இல்லாமலும், உரிய ஈரப்பதத்துடன் இருக்க வேண்டும். விவசாயிகள் கொண்டு வரும் உளுந்து வேளாண் வணிகத் துறையின் வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் ஆகியோரால் தரப்பரிசோதனை செய்யப்பட்டு மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட தரத்தில் உள்ள உளுந்து மட்டுமே கொள்முதல் செய்யப்படும். கொள்முதல் செய்யப்படும் உளுந்திற்கு உரிய தொகை விவசாயிகளின் வங்கி கணக்கிற்கு நேரடியாக வரவு வைக்கப்படும்.

எனவே, விழுப்புரம் மாவட்ட உளுந்து சாகுபடி செய்துள்ள விவசாயிகள் இத்திட்டத்தினை முழுமையாக பயன்படுத்தி கூடுதல் வருவாய் பெற வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.